REGD. No. M. 6311

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 208

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: மாசி 1உ வெள்ளி (12—2—54) ★ ★ ★ வெளியூர்: மாசி 2உ சனி (13—2—54)

காந்தியார் கோட்பாட்டை கொலை செய்யும் காங்கிரஸ் கனம்கள்!

கும்பமேளாவில் பிணக் குவியல்! கவர்னர் மாளிகையில் கேளிக்கை!

—:—:—

அங்கே உயிர் வாதை! - இங்கே உற்சாக போதை!

அங்கே அபலைகள் கதறல்! - இங்கே வாய்ப் பாட்டு குளால்!

சர்க்கார் போக்கைக் கண்டித்து 22 சட்டசபை உறுப்பினர்கள் வெளியேறினர்

லக்னோ, பிப். 11—

உத்திர பிரதேச சட்டசபையில், கவர்னர் பேச இருந்த நேரத்தில், கும்பமேளாவில் நடந்த பயங்கரச் சம்பவத்தைப் பற்றி சர்க்கார் அதிகாரிகளின் வன்னெஞ்சப் போக்கைக் கண்டிக்கும் முறையில், 22 எதிர்கட்சி உறுப்பினர்கள் சபையை விட்டு வெளியேறினர். இப்படி வெளியேறினவர்களில் ஒருகம்யூனிஸ்ட் கட்சியினரும், ஒரு சுயேச்சை உறுப்பினரும் இருந்தனர்.

பி.எஸ்.பி.யைச் சேர்ந்த எதிர்கட்சித் தலைவரான ராஜாராமன், வெளியேறும் பொழுது விளக்கம் ஒன்றும் கூறவில்லை அதற்கு முன்பாகவே தாங்கள் வெளியேற இருப்பதை எழுத்து மூலமாக சபை தலைவருக்கு அறிவித்திருந்தார்.

அவர் பத்திரிகைக்கு விடுத்துள்ள செய்தியில் குறிப்பிடுவதாவது:—

"ஒரு சுதேச்சாதிகாரியின் ஆட்சியில் கூட காணமுடியாதத் தன்மையில், கும்பமேளா கோரச் சம்பவத்திற்குப் பின்னர், சர்க்கார் அதிகாரிகள் கல் நெஞ்சத்தைக் காட்டிக் கொண்டுள்ளார்கள். குடியரசு தலைவரைப் பாராட்டுவதற்காக கூட்டப்பட்டிருந்த விருந்துக் கூட்டம் உற்சாகமாக நடந்து கொண்டிருந்திருக்கிறது. சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு வேண்டிய பரிகாரம் செய்யவேண்டியது சர்க்கார் முக்கியஸ்தர்களின் கடமையாக இருக்க, கடமையை மறந்து விருந்து வேடிக்கையில்

(4-ம் பக்கம் பார்க்க)

—o—

அவர் பெற்றுத் தந்த உப்பு உரிமைக்கும் உலை வைத்துவிட்டனர்

காந்தி—இர்வின் ஒப்பந்தப்படி கடலோர மாநிலங்களில், லைசென்ஸ் இல்லாமல் உப்புக் காய்ச்ச குறிப்பிட்ட நிலப் பரப்பை இந்திய சர்க்கார் அனுமதித்திருந்தது.

1948-ம் ஆண்டில் உப்பும் பஞ்சம் ஏற்பட்டபோது, 10 ஏக்கர் நிலத்திற்குள் தனிப்பட்ட நபர்கள், தாமே உப்புக் காய்ச்சலாமென்றும், இதற்கு லைசென்ஸ் வேண்டாமென்றும் மத்திய சர்க்கார் அனுமதி அளித்தது.

இதனால், 10 ஏக்கர் நிலமுள்ளவர்களில் பெரும்பாலோர் இந்தப் பணியில் ஈடுபட்டு, அதிக உப்பு உற்பத்தி செய்தனர்; ஏற்றுமதியும் செய்தனர். உப்பு உற்பத்தி செய்யும் பாக்டரிகளுக்கு இது போட்டியாக அமைந்தது.

தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் உப்பிற்கு வரி, தரக் கண்ட்ரோல், மற்றும் பலவிதமான தடைகள் விதிக்கப்பட்டன; லைசென்சும் வாங்கப்பட்டது. அவர்கள் தங்களுடைய குறைகளை சர்க்காருக்குத் தெரிவித்தனர்.

இதையெல்லாம், சர்க்கார் ஆலோசித்து, "லைசென்ஸ் இல்லாமல் உப்பு தயாரிப்போர் உற்பத்தி செய்யப்படும் நில பாகத்தை 10 ஏக்கரிலிருந்து 2½ ஏக்கராவாகக் குறைத்துக் கொள்ள வேண்டும்—இல்லையேல், லைசென்ஸ் பெற்று உற்பத்தியில் ஈடுபட வேண்டும்—உப்புக் காய்ச்சலில் ஈடுபட்டிருப்போர் இன்னும் ஒரு ஆண்டு காலத்திற்குள் ஏதாகிலும் ஒரு முடிவுக்கு வரவேண்டும்," என்று முடிவு செய்துள்ளனர்.

திருத்தணி போராட்டத்திற்கு பொறுப்பு யார்?

—(:)—

தி.மு.கழகத்தவரே முன்னணியிலிருந்தனர்

வ. ஆ. மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் விளக்கம்

★

சித்தூர் போராட்டத்தில் தி. மு. கழகத்தினர் கலந்து கொள்ளவில்லை என்று, வட எல்லை பாதுகாப்புக் கமிட்டியின் பேரால் ஒரு அறிக்கை, 8—2—54 'தினத் தந்தி' இதழ், 2-வது பக்கத்தில் வெளிவந்துள்ளது. இதுபற்றி உண்மை நிலைமை, வெளியூர்களிலுள்ள சில தோழர்கட்குத் தெரியாமலிருந்தாலும், சித்தூர்பகுதியிலுள்ள பொது மக்களுக்கு நன்முகத் தெரியும். யார் இதை நடத்தினார்கள் என்பதை—உதாரணத்திற்கு—சில குறிப்புகள் தருகின்றேன். இதை, யாராவது மறுக்க முடியுமா?

16—4—53-ம் தேதி 200 தொண்டர்கள், தி. மு. கழகச் சார்பில், அரக்கோணத்திலிருந்து கால் நடையாக என் தலைமையில் திருத்தணிக்குச் சென்று மறியல் செய்யவில்லையா? இதை வரவேற்று தோழர் விநாயகம் பேசவில்லையா?

இச்செய்தி 18-4-53 'தினத் தந்தி' 'தினமணி' 'சுதேசமித்திரன்' 'பாரத தேவி' ஆகிய பத்திரிகைகளில் வெளிவரவில்லையா?

அங்குள்ள நிலைமையை அறியவும், தம் ஆதரவைத் தரவும் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், 23-4-53-ல், திருத்தணிக்கு வரவில்லையா?

12-5-53-ல், என் தலைமையிலும், தோழர் விநாயகம் தலைமையிலும், திருத்தணியில், சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டு முன்பு மறியல் நடக்கவில்லையா?

அந்த மறியலில், திருத்தணி தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர் தோழர் சம்பந்தம் அவர்கள் மண்டை போலீஸ் தடியடியால் உடையவில்லையா?

இதைப் பற்றிய செய்தி தோழர் அண்ணாதுரைக்கு 13—5—53-ல் அனுப்பப்படவில்லையா?

இச்செய்தி, 14—5—'53 —'தினத் தந்தி' 4-வது பக்கத்திலும், 15—5—53 —'சுதேசமித்திரன்' முதல் பக்கத்தில் வெளி வரவில்லையா?

இவைகளுக்கு என்ன பதில் கூற முடியும்?

திடீரென ம. பொ. சி.-யை யாருக்குத் தெரியாமல், வட எல்லை கமிட்டிக்குத் தலைவராக்கியதிலிருந்துதானே தி.மு. கழகத்தினர் உடன் ஒத்துழைக்க மறுத்தது?

இந்த மறுப்பும், 12-7-53ம் தேதி 'தினத் தந்தி' முதல் பக்கத்தில் வரவில்லையா?

21—6—53-ல், திருத்தணியில், காலை 9-30 மணிக்கு பம்பாய் எக்ஸ்பிரஸ் வண்டியை நிறுத்தி, தோழர்கள் என். ஏ. ரசீத் (வ. ஆ. மா. தி. மு. கழகப் பிரதிநிதி), ஏ. முனுசாமி (திருத்தணி தி. மு. கழகப் பிரதிநிதி), சம்பந்தன் (செயற் குழு உறுப்பினர்) ஆகியவர்களும், சித்தூரில், கேசவன் (செயலாளர் சித்தூர், தி. மு. கழகம்) அவர்களும் 15 நாட்கள் சிறுப்பதி சிறையில் தண்டனை அனுபவித்தார்களே — இதை மறுக்க முடியுமா?

இப்பொழுது கூறட்டும்— யார் திருத்தணி போராட்டத்தில் முழு பங்கேற்றது என்று!

6-லட்சம் டன் பர்மா அரிசி

இந்தியா இறக்குமதி செய்யும்

புதுடில்லி பிப். 11—

6 லட்சம் டன் அரிசியை, நடப்பு ஆண்டில் பர்மாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு இந்தியா—பர்மா ஒப்பந்தம் ஒன்று விரைவில் கையெழுத்தாகுமென்று தெரிகிறது. இரு சர்க்கார்களுக்கு மிடையே இது சம்பந்தமான பேச்சுக்கள் நடைபெற்றன. இதற்கான விலை விவரம் தெரியவில்லை இந்த அரிசி இறக்குமதி காரணமாக ரூ 40 கோடி செலவாகுமெனத் தெரிகிறது.

• • •

விலை குறையாதாம் — பர்மா தகவல்

ரங்கூன், பிப். 11—

இந்தியாவிற்கு அரிசி விற்பது சம்பந்தமாக நீண்ட கால ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ள உத்தேசித்திருப்பதாக பர்மா சர்க்கார் அறிவித்துள்ளது. டன் ஒன்றுக்கு 50 — ஸ்டர்லிங் பவுனுக்குக் குறைந்த விலையில், பர்மா, அரிசி விற்காது என்று தெரிகிறது.

விலையை 35 ஸ்டர்லிங்காகக் குறைக்க வேண்டுமென்று இந்தியா அனுப்பிய கோரிக்கையை பர்மா ஒப்புக் கொள்ள வில்லையாம்!

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழக சட்ட திட்ட திருத்தம்

★

திராவிட முன்னேற்றக் கழகச் சட்ட திட்ட விதிகளில் மாற்றமோ, திருத்தமோ, சேர்ப்போ செய்ய நினைக்கும் பொதுக் குழு உறுப்பினர்கள், அவற்றைத் தீர்மான வடிவில் எழுதி 28-2-54-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்துக்கு வந்து சேருமாறு அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

"அறிவகம்,"
சென்னை,
10—2—54.

சி. என். அண்ணாதுரை,
பொதுச் செயலாளர், தி. மு. கழகம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கைத்தறிக்கு நிதி உதவி

—o—

சென்னை-மத்திய சர்க்கார் திட்டம்

சென்னை, பிப் 10—

இந்திய சர்க்கார் மில் துணிகளுக்கு அதிக வரி விதித்து அதன் மூலம் கிடைக்கும் ரூ 90 லட்சத்தை கைத்தறித் தொழிலுக்கு உதவ சென்னை சர்க்காருக்கு ஒதுக்கியிருக்கின்றனர். சென்னை சர்க்கார் இந்தப் பணத்தை செலவழிப்பதற்கான திட்டங்களை வகுத்திருக்கிறது.

ஏற்கனவே கைத்தறி துணிகளை வாங்குவோருக்கு விலையில் குறைத்துக்கொடுக்கும் திட்டம் அமுல் நடத்தப்பட்டு வருகிறது. இதன்படி ஐந்து ரூபாய்க்கும், அதற்கு மேலும் கைத்தறி துணி வாங்குவோருக்கு ரூபாய்க்கு ஒரு அணா கமிஷன் கொடுக்க முடிவாகி அதன்படி செய்யப்பட்டு வருகிறது. இதனால், கைத்தறி துணி விற்பனை அதிகமாகும்.

கூட்டுறவுச் சங்கங்களில் வாங்கும் துணிக்குக் கமிஷன் கொடுப்பதுபோல் தனிப்பட்டோர் உற்பத்திசெய்து விற்கும் துணிக்கும் இம்மாதிரி கமிஷனை அனுமதிக்க முடியுமா என்ற அம்சத்தைப் போன்ற திட்டமொன்றை இந்திய சர்க்காரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

சீக்கிரத்தில், சர்க்கார் முடிவுகள் கொண்ட விவரமான அறிக்கை யொன்று வெளியிடப் படலாம்.

★

நெசவாளர்களுக்குக் கடன் உதவி

ஒரிசா சர்க்கார் திட்டம்

கட்டாக், பிப். 10—

ஒரிசா மாநிலத்திலுள்ள சுமார் 3,000 கைத்தறி நெசவாளர்களுக்கு தலா ரூ. 100 கடன் உதவி அளிப்பதென்றும், அவர்களைக் கூட்டுறவு முறை அடிப்படையில் ஒன்றாக இணைத்து நிலையம் ஒன்றை அமைப்பதென்றும் ஒரிசா குடிசைத் தொழில் போர்டு தீர்மானித்துள்ளது.

உற்பத்தி செய்யப்படும் துணிகளின் ரகங்கள், தர நிர்ணயம் இவைகளை உத்தேசித்தே இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

★

அஸ்ஸாம் கைத்தறி உற்பத்தி

இந்திய சர்க்கார் உதவி

சில்சார், பிப். 10—

அஸ்ஸாமில் கைத்தறித் தொழில் அபிவிருத்திக்கான 6 திட்டங்களுக்காக இந்திய சர்க்கார் ரூ 1,49,595 பண உதவி அளித்துள்ளது.

இதைத் தவிர, வட்டியில்லாத கடனாக ரூ. 3,17,750 தரப்பட்டுள்ளது. இதை 5 ஆண்டிற்குள் திருப்பிக் கொடுக்கவேண்டும்.

புதுடில்லியில் ஐந்து வல்லரசுகள் மாநாடு?

பெர்லின், பிப் 11—

நான்கு வல்லரசுகளின் வெளிநாட்டு மந்திரிகள் இரகசியமாகக் கூடிப் பேசிவருவதன் விளைவாக, ஐந்து வல்லரசுகள் மாநாட்டுக்கு ஏற்பாடுகள் சீக்கிரமே நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாநாடு எங்கு கூடுவது என்பதில் அபிப்பிராய பேதமிருப்பதால், சமரச ஏற்பாடாக புதுடில்லியில் நடத்த ஒப்புக்கொள்ளலாம் என்றும், இந்தியா நடுநிலைமை அதிதியாக இருந்து இம்மாநாட்டை நடத்திவைக்க உதவும்படி கோரப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

" நடவடிக்கை எடுப்பேன் !"

பரூக் மிரட்டுகிறார் !

லண்டன், பிப். 11—

தன் சொத்துக்களை ஏலத்தில் வாங்குபவர்கள் மீது வழக்குத் தொடரப் போவதாக எகிப்து முன்னாள் மன்னர் பரூக் எச்சரித்திருக்கிறார்.

இதுபற்றி இங்குள்ள எகிப்து ஸ்தானிகராலய அதிகாரி கூறுகையில், 'இது வீண் மிரட்டல்,' என்றும், இம்மாதிரி ஏற்கனவே பல நாடுகளில் நடந்துள்ளதென்றும், எகிப்தின் பணத்தைக் கொண்டுதான், பரூக், இப்பொருள்களை வாங்கினார் என்றும் கூறினார்.

பரூக், சில பொருள்கள் தன் குடும்பச் சொத்தாகும் என்று கூறுகிறாராம்.

எகிப்து புரட்சிகர சர்க்கார், சென்ற பிப்ரவரியிலேயே பரூக்கின் சொத்துக்கள் பொது மக்கள் சொத்தாகிவிட்டது என்று பிரகடனப் படுத்தியுள்ளது.

* * *

" நடவடிக்கை எடுத்தால் செல்லாது "

எகிப்து சர்க்கார் அறிவிப்பு

கெய்ரோ, பிப். 12—

'பரூக்கின் சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டவையாகும். அவை பொது சொத்து என்று அறிவித்து ஏற்கனவே பிரகடனம் செய்யப்பட்டுவிட்டது; ஆகவே, அப்பொருள்களை ஏலத்தில் வாங்குபவர்கள் அப்பொருளின் உண்மையான சொந்தக்காரர் ஆவர். அவர் மீது பரூக் எவ்வித நடவடிக்கையையும், அப்பொருளகளை வாங்கியதற்காக எடுக்க முடியாது," என எகிப்து சர்க்கார் அறிவித்துள்ளது.

* * *

முன்னாள் ராணி வெளியேறுகிறார் !

கெய்ரோ, பிப் 11—

எகிப்தின் முன்னாள் ராணி ஏமென் சதக் யாரையுமே மணக்கப் போவதில்லை என்றும், இம்மாதிரி வதந்திகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கவே நரிமனும், அவர் தாயும் கெய்ரோவை விட்டு வெளியேறிவிட்டனர் என்றும் அவர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் கூறினார்.

"கம்யூனிஸ்டுகளுடன் தொடர்பு கொள்ளாதே "

சோவியத் பிரதிநிதிகளுக்கு இலங்கைப் பிரதமர் எச்சரிக்கை

கொழும்பு, பிப். 8—

ஆசிய கீழ்த்திசை ஸ்தாபன கூட்டத்திற்காக இங்கு வந்திருக்கும் ரஷிய பிரதிநிதி இலங்கை கம்யூனிஸ்டுகளோடு தொடர்பு கொள்ளக்கூடாது என்று தாம் எச்சரித்ததாக இலங்கை பிரதமர் ஒரு பொதுக் கூட்டத்தில் கூறினார்.

கண்டி ஓட்டலில் தங்கியுள்ள ரஷ்ய பிரதிநிதிகள் இலங்கை கம்யூனிஸ்டுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக தான் அறிந்ததாக அவர் தெரிவித்தார்.

" இலங்கைக்கு அரோகம் செய்யத் திட்டமிட்டுக் கொண்டிருக்கும் ரஷியக் கூலிகளை ஏன் பின்பற்றுகிறீர்கள்?" என்று இலங்கை பிரதமர் பொதுமக்களைக் கேட்டார்.

ஆசை விடவில்லை !

புதுடில்லி, பிப். 8—

பிரிட்டிஷ் சர்க்கார் அளித்த ஜி. ஸி. எஸ். ஐ, ஜி. ஸி. ஐ. ஈ, கே. ஸி. எஸ். ஐ, கே. ஸி. ஐ. ஈ, போன்ற பட்டங்களை இந்திய மன்னர்களில் பாதிப் பேர்களுக்கு மேல் விட்டொழித்து விட்டனர். இன்னும் 50 பேர்களே அப்பட்டங்களை விடாமலிருக்கிறார்களாம் !

கழகக் கூட்டங்கள்

★

திருச்சி

திருச்சி தி. மா. மு. கழகம்

தூத்துக்குடி வழக்கு நிதி அளிப்பு விழா

14—2—54 காலை 9 மணிக்கு

இடம் : தேவர் மன்றம்

பேசுவோர் :

இரா. நெடுஞ்செழியன்

நாஞ்சில் கி. மனோகரன்

அருண்மொழி

★

கழிஞ்சூர்

பொங்கல் விழா

14—2—54 மாலை 6 மணிக்கு

பேசுவோர் ,

மீ. சு. இளமுருகு

பொற்செல்வி

★

திருமங்கலம்

14—2—54 மாலை

இடம் : பந்தடி திடல்

பேசுபவர் :

என். எஸ். இளங்கோ

★

புதுக்கோட்டை

(சாந்தனுதபுரம்)

14—2—54 மாலை

பேசுவோர் :

சி. பி. சிற்றரசு

எம். எஸ் ராமசாமி

பம்பாய் தி. மு. க. மாநாடு வரவேற்புக்குழு கூட்ட அமைப்பு

" பம்பாய் தி. மு கழக முதல் மாநாட்டு வரவேற்புக் குழு கூட்டம் 14-2-54 ஞாயிறு மாலை 5 மணிக்கு தாராவி தி. மு. கழக அலுவலகத்தில் நடைபெறும் வரவேற்புக் குழு உறுப்பினர்களும், கிளைக் கழகப் பிரதிநிதிகளும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகின்றோம்," என்று செயலாளர்கள் அறிவிக்கின்றனர்.

அரித்திராநதி தி.மு.கழக செயற் குழு உறுப்பினர்களுக்கு

14-2-54 இரவு 8 மணிக்கு, தோழர் எம். ஏ. சாந்திநாதன் இல்லத்தில், செயற்குழு கூட்டம் நடைபெறுவதால், அழைப்பு அனுப்பப்பட்ட உறுப்பினர்கள் வரவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். கூட்டத்தில் தூத்துக்குடி நிதி அளிப்பது பற்றியும், பொதுக்கூட்டம் நடத்துவது பற்றியும் கலந்து பேசப்படும் என செயலாளர் எம். ஏ. சாந்திநாதன் அறிவிக்கிறார்.

திருச்சி நகர தி. மு. கழக உறுப்பினர் கூட்டம்

திருச்சி பிப் 9—

" 14—2—54 இரவு 10 மணிக்கு, திருச்சி, சின்னக்கடை வீதியிலிருக்கும் தி. மு. கழகக் கட்டிடத்தில் நடைபெறும். அதுசமயம் திருச்சியில் அடுத்த மாதம் நடைபெற இருக்கும் பொதுக் குழுவிற்கு ஆக்க வேலை செய்வது பற்றி முடிவு செய்யப்படும். எனவே தோழர்கள் அனைவரும் இதையே அழைப்பாகக் கொண்டு தவறாது வரவேண்டுகிறேன்" என்று செயலாளர் அறிவிக்கிறார்.

தொழில் உறவின் முதல் விரோதி !

—o—

கிரியின் 'சர்டிபிகேட் !'

கான்பூர், பிப். 9—

"தொழில் உறவுக்கும், அமைதிக்கும் முதல் விரோதி மத்தியஸ்தத் தீர்ப்புதான்," என்று மத்திய அரசாங்கத் தொழில் அமைச்சர் வி. வி. கிரி, உலக விவகாரங்கள் பற்றிய இந்தியக் கழகக் கூட்டத்தில் குறிப்பிட்டார்,

மேலும் அவர் சொன்னார்:—

"தொழிலாளர் தங்கள் தேவைகளைச் சிந்தித்துத் தீர்த்துக்கொள்ள வேண்டும். இந்தத் 'தேவைகள்' தொழிலின் பொருளாதார நிலைக்கு ஏற்றதாக இருக்கவேண்டும்; அப்படி இருந்தால்தான் முதலாளிகளும் இணங்குவர். தொழிலாளர்களின் இன்றியமையாத தேவைகளை ஏற்காத முதலாளிகளை மறைமுகமாக நிர்ப்பந்தம் செய்ய வேண்டும். அதற்கும் முதலாளிகள் செவிசாய்க்கவில்லை யென்றால் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்யலாம்" என்று சொன்னார்.

நெய்வேலி சுரங்கம்

இந்திய சர்க்காருக்கு சென்னை சர்க்கார் கடிதம்

சென்னை, பிப். 11—

" ஷவர் " என்ற இயந்திர சாதனம் மூலம் நெய்வேலியில் சுரங்க வேலையைச் செய்வதற்கு டி. கி. ஏ. நிர்வாகிகள் இரண்டு இயந்திரங்கள் கொடுக்க இசைந்திருக்கின்றனர். சென்னை தொழில் மந்திரி தலைமையில் அதிகாரிகள் கூடி இவற்றை எப்படித் துரிதமாகப் பெறுவது என்பதைப் பற்றி யோசித்தனர்.

இது விஷயமாக பண உதவி செய்யவேண்டுமென்று இந்திய சர்க்காருக்கு எழுதுவதென்று முடிவு செய்யப்பட்டது.

இதைப் பின்பற்றி சென்னை சர்க்கார் இந்திய சர்க்காருக்கு எழுதியுள்ளனர்.

இந்த "ஷவர்"கள் கிடைத்தால், நெய்வேலி மின்சாரத் திட்டம் ஒரு சிறந்த கட்டத்தை அடையுமென்று எதிர்பார்க்கலாம்.

விழித்துக்கொண்டார் !

வாஷிங்டன், பிப். 10—

தனது இராணுவத்தை அபிவிருத்தி செய்து கொள்ள, அமெரிக்காவின் இராணுவ உதவியை ஏற்கத் தயாராக இல்லையென்று அமெரிக்காவுக்கு சவூதி அரேபிய மன்னர் தெரிவித்துவிட்டதாக இங்கு விஷயமறிந்த வட்டாரத்திலிருந்து தெரியவருகிறது.

காங்கேயம் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

7-2-54-ல், தோழர் என். வி. நடராசன் கலந்துகொள்வதாக இருந்த பொதுக் கூட்டம் 21—2—54 அன்று நடைபெறும்.

தூத்துக்குடி வழக்கு நிதி காலை படக் காட்சி

14—2—54 ஞாயிறு காலை 9-30 மணிக்கு. தோழர் மு. கருணாநிதி எழுதிய "தேவகி" சினிமா படம் காலைக் காட்சியாக, சென்னை பெரம்பூர் லட்சுமி டாக்கீசில் நடைபெறும்.

—19-வது வட்டம், தி. மு. க

ஜாதி ஒழிப்பு மாநாடு

14-2-54 மாலை 3 மணிக்கு, சேலம் ஜில்லா, நாமக்கல் தாலூகா, பாலப்பட்டியில், மல்லாண்டார் கோவில் மைதானத்தில் அமைக்கப்பட்டிருக்கும் திருவள்ளுவர் பந்தலில் நடைபெறும்.

சென்னை 34-வது வட்ட தி. மு. கழகம்

நுங்கம்பாக்கம் தி. மு. கழக செயற்குழு கூட்டம், மக்கள் மகிழ்ச்சி மன்றத்தில் மாவட்ட செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றபோது, கழக வளர்ச்சியை முன்னிட்டு தற்போது இருக்கும் நிர்வாக உறுப்பினர்களைக் கலைத்து மாவட்டக் கழகத்தின் அனுமதியின் பேரில் புதிய செயற்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

சென்னை 5-வது வட்டம் தி. மு. கழகம்

சென்னை 5-வது வட்ட தி. மு. கழகம், எண் 2, அளகிங்க ரோமணித் தெருவில் இருக்கும், 7-2-54 காலை கழகக் கட்டிடத்தில், சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் மீண்டும் உறுப்பினர்கள் தேர்வு நடைபெற்றது.— செயலாளர் : வி. இராசேந்திரன்; துணைச் செயலாளர் : ஆர். வேணுகோபால்; பொருளாளர் : எஸ். எஸ். பி. லிங்கம்; மாவட்டப் பிரதிநிதிகள் : எஸ் எஸ். பி. லிங்கம், விருதை மன்னன்; செயற்குழு உறுப்பினர்கள் : எம். மோகனன், ஆர். இராமதாஸ், டபிள்யூ. எஸ். சிவசங்கரன், வி. சந்திரசன், என் எஸ். துரைசிங்கம், இளந்தென்றல், இரா. ஏகாம்பரம், வி. சுப்பிரமணி, எ. நடேசன், விருதை மன்னன், எஸ். ராமன், எஸ். எஸ். பி. லிங்கம், ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நரோடா வட்ட தி. மு. கழகம்

அமதாபாத், பிப். 11—

" 7—2—54-ல், தோழர் எம். பெரியசாமி தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், 11—12—53 முதல் 6—2—54 வரையிலுள்ள வரவு — செலவு கணக்குகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது" என்று செயலாளர் வே. கிருஷ்ணமூர்த்தி அறிவிக்கிறார்.

மாதுங்கா தி. மு. கழக செயற்குழு கூட்டம்

பம்பாய், பிப் 11—

7—2—54 காலை 10-30 மணி யளவுக்கு கபூர்வாலா கட்டிடம், 59-ம எண்ணில் தோழர் இ. எஸ். எஸ். பிச்சையா தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர் இ. எஸ். எஸ். பிச்சையா, பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கழக வளர்ச்சி குறித்து தோழர்கள் ஜே ஜோதி நாயகம், க மன்னர், தோ. அ. அன்புச்செழியன், பொன். இர. சபாபதி முதலியோர் பேசினர். தோழர் எஸ். வேலையா, தனது பெயரை 'தாமரைச் செல்வன்' என மாற்றிக் கொண்டதற்கான அளித்த தேநீர் விருந்துக்குப் பின் செயலாளர் ஜே. ஜோதிநாயகம் நன்றி கூறினார்.

" இன்ப இரவு "

வடக்கன்குளம், பிப். 9—

31—1—54 இரவு 9 மணிக்கு கேரு பாடசாலை திடலில், தோழர் கு. ச. பிரான்சிஸ் அவர்கள் தலைமையில், தமிழறிவு இயக்கப் பணிமனை நிதிக்காக 'இன்ப இரவு' என்ற நாடகம் நடைபெற்றது. அதுபோது தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள், தமிழறிவு இயக்கத்தின் அவசியத்தைப் பற்றியும், அது செய்யவேண்டிய பணியைப் பற்றியும் பேசினார்.

நாடகத்தின் இடைவேளையில் நடிகர்களனைவரையும் பாராட்டி, இதுபோன்ற அறிவுப் பிரச்சாரங்கள் செய்ய நாடகக் கலை பெரிதும் உதவி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டார்,

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 12—2—1954 வெள்ளி

துரோணாச்சாரியம்!

தலைப்பு, புதியதொரு அரசியல் அல்லது பொருளியல் தத்துவத்தைக் குறிப்பிட எழுந்த சொல் அல்ல. ஆரிய நடைமுறையை விளக்கும் அருமருந்தன்ன வார்த்தையாகும்!

ஏகலைவன் என்ற ஒரு வேடன், துரோணாச்சாரி என்ற ஆரிய வில்லாளனிடம், வில் வித்தையைக் கற்றுத் தரும்படி வேண்டினான். அரச குடும்பத்திற்கே வில் வித்தை கற்றுத் தர வேண்டும் என்ற வேத விதிப்படி, தாழ்ந்த குலமான வேடர் குலத்தில் பிறந்த ஏகலைவனுக்கு வித்தை போதிக்க முடியாதென, ஆரிய ஆசிரமவாசியான ஆரிய சிரேஷ்டர் துரோணர் மறுத்துவிட்டார். அறிவு பக்குவமடையாத வேடன், வன்கணாளனைப் போன்றதோர் சிலையைச் செய்து வைத்து, அதன்முன் நின்று நாள்தோறும் வில் பயிற்சியில் ஈடுபட்டு வந்தான். பலநாள் பயிற்சிக்குப் பிறகு வேடனும் வில் தொழிலில் விற்பன்னன் ஆனான்.

அந்த வழியே ஒரு நாள் பஞ்சபாண்டவரை அழைத்துக்கொண்டு துரோணர் வந்தார். அவர்களுடன் பாண்டவரின் நாயும் தொடர்ந்து வந்தது. தன் இயல்புபடி, ஏகலைவன் வைத்து வணங்கிய துரோணர் சிலையைக் களங்கப்படுத்திவிட்டது, அந்தப் பாண்டவரில் ஒருவன் வளர்த்த நாய்! இதுகண்ட வேடனுக்குக் கோபம் ஏற்பட்டது. நாயின் மீது அம்பு தொடுத்தான். அம்படிபட்ட நாய் குருதி சொட்டச் சொட்ட, எஜமானனிடம் சென்று பாதத்தில் விழுந்தது. நாய்க்குப் பட்டுள்ள அம்படியின் தன்மையைக் கண்ட அர்ச்சுனன், குருவான துரோணரை நோக்கினான்: 'ஒரே அம்பெய்தி, ஒரு உடலில் பல இடங்களைத் துளைக்கும் வித்தையை, எனக்கு மட்டும்தான் கற்றுக்கொடுத்திருப்பதாகக் கூறினீரே, இதோ, என் நாயின்மீதுள்ள புண்கள் அந்த வித்தையைத் தாங்கள் வேறு ஒருவருக்கும் கற்றுத் தந்துள்ளீர் என்று எடுத்துக் காட்டுகின்றனவே!' என்ற வினாவை, அவனுடைய கோபப் பார்வை கேட்டது.

உயிர்வாதை பட்டுக்கிடந்த நாய் முன் தொடர, குருவும், அரசிளங் குமாரர்களும், ஆரியனின் சிலை இருந்த ஏகலைவன் சிலம்பக்கூடத்திற்கு வந்தனர்.

குருவும் கோமகன்களும் தன் கூடம் நோக்கி வருவதைக் கண்ட வேடன், எதிர்கொண்டு அழைக்க விரைந்து, ஆரியனின் காலில் விழுந்து வணங்கினான்.

நாய் அடிபட்ட வகையை இயம்பென குரு கேட்க, குரு பக்திமிக்க வேடன், தான் வில் வித்தை பயின்ற வரலாற்றை விளக்கிக் கூறினான்.

வேடனின் குரு பக்திக்கு மகிழ்ந்து, குரு காணிக்கையாக வேடனின் வலது கை கட்டை விரலைப் பெற்று, ஆரியக் குல முறைக்குக் களங்கம் ஏற்படாமல் காத்து நின்றான், அந்த ஆரிய ஆசிரியன்!

பல் போனால் சொல் போயிற்று. வலது கை கட்டை விரல் நறுக்கப்பட்டால், ஒருவன் கற்ற விற்றொழிலும் அக்கணமே மறைந்தொழிவது நிச்சயம். விளைவு தெரிந்த நயவஞ்சகன், ஏகலைவன் கற்ற வில் வித்தைகளை எல்லாம் காணிக்கையாகப் பெற்றுவிட்டான்.

துரோணர் வெளிப்படையாகக் கேட்டதோ குரு காணிக்கை! ஆனால், உண்மையில் பெற்றதோ, ஒருவன் இறக்கும் காலம் வரை வாழக் கற்றிருந்த சிறந்தத் தொழில் திறம்! சொந்தத்தில் தொழில் செய்து, மானத்தோடு வாழ வேண்டிய ஏகலைவனை, சாகும் வரையில் பிறரிடம் இச்சகம் பேசி பிச்சைப் பிழைப்புப் பிழைக்கச் செய்துவிட்டான் ஆரிய முனிவன்!

காணிக்கையாகப் பெற்ற வேடனின் கட்டை விரல், துரோணனுக்குக் காதொடிந்த ஊசியளவும் பயன்தரப் போவது கிடையாது. இந்த உண்மையும் தெரியும் அந்த ஆரியனுக்கு!

தான் பயன்பெறப் போவது ஒன்றுமில்லையானாலும் மனமுவந்து காணிக்கை கொடுத்தவனின் வாழ்வை இருள் சூழச் செய்வதில் ஆரியக் குல தீபமாம் துரோணருக்கு இருந்த நெஞ்சழுத்தம், நாம் ஆராய்ந்தறிய வேண்டிய ஒன்றாகும்! அதில் மறைந்து கிடக்கும் பொருளைத்தான் நாம 'துரோணாச்சாரியம்' என்று சுட்டியுள்ளோம்!

கனம் ஆச்சாரியார் சென்னை முதல் அமைச்சர் என்ற முறையில், தமிழ்—திராவிட சிறுவர்களின் கல்விக் கண்ணைக் குருடாக்கப் புகுத்தியுள்ள புதிய கல்வித் திட்டம், அவருக்குள்ள துரோணாச்சாரியத்தின்பாற்பட்டதே ஆகும். முகத்திரண்டு புண்ணுடைய கல்விபற்றக் குருடர்களாய் திராவிடக் குடிபிறந்த சிறுவர்கள் ஆக்கப்படுவதில், கனம் ஆச்சாரியார் அடையப் போகும் உருவான பலன் ஒன்றுமில்லையானாலும் கட்டை விரல் கேட்டுப் பெற்று ஏகலைவன் எதிர்கால வாழ்வைப் பறித்த துரோணர்போல, திராவிடர்களை கல்விக் குருடர்களாக்கி வாழ்க்கையில் தட்டுத்தடுமாறி அவதியுற வைப்பதில், அலாதியான பிரேமை கொண்டுள்ளார், அன்னார் ஆச்சாரியார்!

இப்படிப் பிறர் இன்னல் கண்டு பூரிப்படையும் போறிவாளர்கள் மக்கள் உருவிலும் உண்டு என்பதற்கு, கனம் ஆச்சாரியார் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு, //

புதிய கல்வித் திட்டம் பற்றி, நாட்டு நல்லறிவாளர்கள், கல்வி நிபுணர்கள் எடுத்துக் காட்டிய குறைபாடுகள் குன்றுபோல் குவிந்து கிடந்தும், நாம் எழுதிக் காட்டியது கும்பல் கும்பலாகச் சேர்ந்து கிடந்தும், கனம் ஆச்சாரியார் தமது பிடிவாதத்தை, திராவிடரைக் குருடாக்கும் கோர திருவிளையாட்டை விட்டுக்கொடுக்க மனம் கொள்ளாதவராகவே உள்ளார். எப்படியும் திராவிடரின் எதிர்காலத்தைப் பாலைவனமாக்கியே தீருவதென முடிவுக்கு வந்திருப்பவரிடம், திராவிடத்தைப் பூங்காவாக மாற்றுவார் என்று எதிர்பார்ப்பது கூடாதல்லவா? நிற்க,

கனம் ஆச்சாரியாரின் கெடுமதி கல்வித் திட்டம் பற்றி கருத்தறிவித்தவர்களில் தொடக்கக் கல்வி ஆசிரியர்கள் நூற்றுக்கு ஒருவர்கூட இல்லை என்பது உண்மையாகும் எங்கோ ஆயிரத்துக்கு ஒருவர் என்ற எண்ணிக்கையில்தான் ஆரம்ப ஆசிரியர்களில் சிலர் ஆச்சாரியார் திட்டம் பற்றி, ஒளிவு மறைவு இல்லாமல் குணதோஷம் கூறி இருக்கிறார்கள்.

//இந்த வகையைச் சேர்ந்ததுதான் சேலம் மாவட்ட ஆரம்ப ஆசிரியர் மாநாட்டில் கலந்துகொண்ட சில ஆசிரியர்கள் கூறிய குறைபாடு ஆகும். ஆசிரியர்களின் இந்தக் கடமை உணர்ச்சி அமைச்சர் ஆச்சாரியாரின் உள்ளத்தில் மறைந்து கிடக்கும் துரோணாச்சாரியத்தைத் தட்டி எழுப்பிவிட்டிருக்கிறது. ஆசிரியர்களின் கடமைப் பட்டியலில் சிலவற்றைக் காட்டியும், அதற்கான தண்டனையை விளக்கியும் புதிய உத்திரவு ஒன்றை சென்னை சர்க்கார் பிறப்பித்து இருக்கிறது.

இந்தப் புதிய துரோணாச்சாரியம் எட்டுத்திக்கு ஆசிரிய ஏகலைவர்களின் கட்டை விரல்களைக் காணிக்கையாகப் பெறப் போகிறதோ, யார் கண்டார்கள்?//

கட்டை விரலைக் காணிக்கையாகக் கொடுத்த ஏகலைவன் மாசினார், நிரந்தரமாகக் கெட்டுப் போனார்கள் என்ற வரலாறும் இல்லை; கெடுமதி கொண்ட துரோணாச்சாரிகள் என்றென்றும் நிலையாக வாழ்ந்தார்கள் என்ற கதையும் இல்லை.

'கட்டுண்டோம்—காத்திருப்போம்— காலம் மாறும்' என்ற பாரதியாரின் வாக்கில் கொஞ்சம் திருத்தி 'கட்டுண்டோம்—முயற்சிப்போம்—முடிவு காண்போம்' என்று, ஆயிரமாயிரம் ஆசிரியர்களுக்கு அறிவித்துக் கொள்ளுகிறோம்.

விவசாய அபிவிருத்தி

விரிவான ஆராய்ச்சித் திட்டங்கள்

புதுடில்லி, பிப். 11—

விவசாய அபிவிருத்தி, கால்நடை வளர்ப்பு ஆகியவை பற்றி நடப்பு ஆராய்ச்சித் திட்டங்கள், புதிய ஆராய்ச்சித் திட்டங்கள் ஆகியவை சம்பந்தமான நிதிப் பிரச்சினைகள் பற்றி, புதுடில்லியில் கூடிய இந்திய விவசாய ஆராய்ச்சிக் கௌன்சிலின் நிரந்தரக் கமிட்டி பரிசீலித்தது. கூட்டத்திற்கு மத்திய உணவு விவசாய இலாகா காரியதரிசி எச். எம். பட்டேல் தலைமை வகித்தார்.

தொழில் நுட்ப ரீதியில், செவ்வையான திட்டங்கள் என்று ஆலோசனை போர்டு அத்தாட்சியளித்துள்ள சகல திட்டங்களையும் கமிட்டி அங்கீகரித்து அவற்றிற்கு நிதியும் ஒதுக்கியுள்ளது.

தொடர்ந்து நடத்தி வரும்படி ஆலோசனை போர்டு சிபாரிசு செய்துள்ள நடப்பு ஆராய்ச்சித் திட்டங்களை, மாநில சர்க்கார்களின் கூட்டுறவுடன் நடத்தி வரும் வகையில் ஏற்படுகிற செலவில் கௌன்சிலின் பங்கு 32,25,325 ரூபாய் ஆகும். இந்தத் திட்டங்களில் நெற்பயிர் வளர்ப்பு, கோதுமைத் துரு நோய்க் கட்டுப்பாடு, கலப்பினச் சோள விதைப் பெருக்க வேலை, புல்வெளிப் பிரதேச சர்வே, உரப் பரிசோதனைகள்—மண்வள சர்வே, பழப் பதன வேலை, கால்நடை அபிவிருத்தி, சிந்தி கறவைப் பசுக்களை வேலைக்குப் பயன்படுத்துவது பற்றி ஆராய்ச்சி ஆகியவை அடங்கியிருக்கின்றன.

ஆலோசனை போர்டு புதிதாகச் சிபாரிசு செய்துள்ள திட்டங்களை நடத்தி வருவதற்குக் கௌன்சிலுக்கு மொத்தம் 68,12,330 ரூபாய் செலவாகும். அத்திட்டங்களில் கலப்பினச் சோள வகைகளை வியாபார ரீதியில் உற்பத்தி செய்வது, புழுதி சாகுபடி, நிலவளப் பாதுகாப்பு, தரிசு நில மீட்சி, பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றின் சேமிப்பில் ரசாயனப் பொருள்களால் ஏற்படுகிற மாறுதல்கள், உள்நாட்டு விவசாய உபகரணங்களின் சர்வே, கால்நடைகளின் கலப்பு இனவிருத்தி, கழிவுப் பொருள்களை கால்நடைகளுக்குத் தீவனமாக உபயோகிப்பது, கால்நடைத் தீவனத்தில் புரதப் பொருளுக்குப் பதிலாக யூரியாவின் உபயோகம் ஆகியவைகள் அடங்கியிருக்கின்றன.

மாநிலங்களின் அமைப்பு பிரிட்டிஷ் முறையிலுள்ளது

மொழிவழியில் திருத்தி அமைக்க அனுமந்தையா கோரிக்கை

சர்வதேசத் தொழிலாளர் நிலையம்

உள்நாட்டுப் போக்குவரத்துக் கமிட்டி இந்தியப் பிரதிநிதிகள்

புதுடில்லி, பிப். 11—

ஜினிவாவில், பிப். 15ம் தேதியிலிருந்து 27ம் தேதி வரையில் நடைபெறவிருக்கும் சர்வதேசத் தொழிலாளர் நிலையத்தின் உள்நாட்டுப் போக்குவரத்துக் கமிட்டியின் ஐந்தாவது கூட்டத்துக்குச் செல்லும் இந்தியப் பிரதிநிதிகள் விவரம்:

சர்க்கார் பிரதிநிதி: என். சென், ஐ. சி. எஸ்., ஜினிவாவில் இந்தியாவின் கான்ஸல்—ஜெனரல்.

முதலாளிகள் பிரதிநிதிகள்:- டாக்டர் விலாகூ சன்யால், கல்கத்தா; லால்சந்த் ஹிராசந்த், பம்பாய்—1.

தொழிலாளர் பிரதிநிதிகள்:- எஸ். குருசாமி எம். பி. மயிலாப்பூர், சென்னை; சந்துலால் ஷா, ஆமதாபாத்.

பம்பாய் 'ஆர்ரே' பால் நிலையம்

சர்வதேச முக்கியத்துவத்தைப் பெறும்

—o—

பம்பாய், பிப். 11—

பம்பாயிலுள்ள 'ஆர்ரே' பால் நிலையத்தில், பால்பண்ணை ஆராய்ச்சிக்கும், பயிற்சிக்கும் இடமளிக்க ஐ. நா. உணவு விவசாய நிலையம் அனுமதியளித்தால் சீக்கிரமே இந்த நிலைமை சர்வதேச முக்கியத்துவத்தை அடைந்துவிடும்.

பீஜாப்பூர், பிப். 10—

"உத்திர பிரதேசம் போன்ற பெரிய நிலப்பரப்பு மாநிலமும், பிலாஸ்பூர் போன்ற சில நிலப்பரப்புடையதுமான நாட்டையும் பிரித்து வைத்திருப்பது விரும்பக் கூடியதாகாது.

எல்லா 'ஏ' வகுப்பு மாநிலங்களும் உடனடியாகத் திருத்தி அமைக்கப்பட வேண்டும். அதிக செலவழிக்கக்கூடிய சட்டசபை ஏற்பாடுகளைத் தனித் தனியாக, அவைகள் கொண்டிருப்பது அவைகளால் சமாளிக்க முடியாததாகும்.

மூன்று வகையாக இந்தியாவில் மாநில அரசுகளைப் பிரித்து வைத்திருப்பது, குடியேற்ற நாடு, கட்டிக்கிடக்கும் நாடு, முடிவழி சிறு நாடு என்று தங்கள் ஆதிக்கத்தின் கீழ் இருந்த நாடுகளைப் பாகுபாடு படுத்தி வைத்திருந்த நம்மூர் ஒப்பானதும்.

நிலப்பரப்பிலும், மக்கள் தொகையிலும், அந்தஸ்திலும், அதிகார வரம்பிலும் ஒன்றே போல் உள்ள மாநிலங்களாக, மொழிவழியைக் கருத்துள் கொண்டு இந்தியாவைத் திருத்தி அமைக்க வேண்டும்.

இந்தியாவிலுள்ள இரும்புக் கனிகள்

சென்னை மாநிலத்தில் 100 கோடி டன் 'மாகனைட்' ரகம்

சென்னை, பிப். 11—

சென்னை மாநிலத்தில் 100 கோடி டன் 'மாகனைட்' ரக இரும்புக் கனிகள் கிடைப்பதாக பூமி தத்துவ சர்வேயில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மைசூர் மாநிலத்தில் இந்த ரகம் 200 டன் உள்ளதாம்.

சிவப்பு நிறமுள்ள இரும்புக் கனி (ஹெமடைட்) பின்கண்ட இடங்களில் கிடைக்கின்றன:

மைசூர்: 300 கோடி டன்; ஸாண்டூர்: 25 கோடி டன்; பீகார், ஒரிசா 800 கோடி டன்; மத்தியப் பிரதேசம்: 300 கோடி டன்.

பழுப்பு நிறமுள்ள இரும்புக் கனி (லிமோனைட்) சுமார் 50 கோடி டன்னுக்கு மேற்கு வங்கத்தில் கிடைக்கிறது.

இலங்கை பார்லிமெண்டு

இந்தியர்களுக்கு 8 ஸ்தானங்கள்

கொழும்பு, பிப். 10—

இலங்கைப் பார்லிமெண்டின் கீழ்ச் சபைக்கு அதாவது மக்கள் பிரதிநிதித்துவ சபைக்கு அடுத்த பொதுத் தேர்தலில் 133 ஸ்தானங்களுக்குத் தேர்தல் நடைபெறும். இப்போதுள்ள உறுப்பினர்களை விட 38 உறுப்பினர்கள் அதிகம் இருப்பர். அதில், இந்தியர்களுக்காக 8 விசேஷ ஸ்தானங்கள் ஒதுக்கப்படும்.

இந்திய — இலங்கை உடன்படிக்கைப்படி, இப்பொழுது இலங்கை பிரஜைகளாக மாறிய இந்தியர்களுக்காகவே ஸ்தானங்களை அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

துணி மில் இயந்திரங்கள்

ரஷ்யாவிடமிருந்து பிரிட்டன் ஆர்டர்களை எதிர்பார்க்கிறது

லண்டன், பிப். 11—

துணி மில் இயந்திரங்களுக்கான ஆர்டர்களை ரஷ்யாவிடமிருந்து பிரிட்டன் எதிர்பார்க்கலாம் என்று வர்த்தக வட்டாரங்களில் கூறப்படுகிறது.

போலீஸ்—ஆசிரியர்களுக்கு இடையில் அமைதிப் போர்!

வங்காள ஆசிரியர்கள் உட்கார்ந்து மறியல் செய்தனர்

பத்து லட்சம் மாணவர்கள் பள்ளிக்கு செல்லவில்லை

கல்கத்தா, பிப். 11—
வங்காளத்தில் உள்ள சுமார் 25,000 உயர்நிலைப் பள்ளி, நடுத்தரப் பள்ளி ஆசிரியர்கள் விலைவாசிப் படியைக் குறைக்க வேண்டும் என்று கோரி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதன் விளைவாக 10 லட்சம் மாணவர்களுக்குப் படிக்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

2,528 சர்க்கார் தொடர்பற்ற உயர்நிலை, நடுநிலைப் பள்ளிகளுக்கு பிரதிநிதித்துவம் கொண்டதாக இருக்கும் வங்காள ஆசிரியர் சங்கத்தின் முடிவிற்கிணங்கவே இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது.

இவர்களில் 6 ஆசிரியர்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருப்பதாக ஒரு செய்தி அறிவிக்கிறது.

கல்கத்தா நகரின் ஆசிரியர்களின் வேலை நிறுத்தத்துக்கு ஆதரவளிக்கும் முறையில் மாணவர்கள் சில பள்ளிகளின்முன் மறியல் செய்தனர். அதற்காக ஆறு மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது.

கல்கத்தாவில், வெளியிலும் வேலை நிறுத்தம் முழு வெற்றி பெற்றுள்ளதாகவும், அமைதியாக நடைபெற்றிருப்பதாகவும் ஆசிரியர் சங்கச் சார்பில் கூறப்படுகிறது.

பாகுபாடு பார்க்காமல் ஆசிரியர்கள் அனைவருக்கும் திங்கள் ஒன்றுக்கு 35 ரூபாய் வீதம் விலை உயர்வுப்படி வழங்கப்பட வேண்டுமென்று ஆசிரியர்கள் கேட்டுள்ளனர். அதற்கு, மாதம் ஒன்றுக்கு ரூபாய் 5 வீதம் சர்க்கார் மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டும் தரச் சம்மதிப்பதாக வங்க சர்க்கார் சென்ற வார இறுதியில் அறிவித்தது. இதை, ஆசிரியர் சங்கம் மறுத்துவிட்டது.

தற்சமயம் ஆசிரியர்கள் பஞ்சப்படி என்ற வகையில் சர்க்காரிடமிருந்து ரூபாய் 10-ம், அவரவர்கள் பணி புரியும் பள்ளிகளிலிருந்து ரூபாய் 5 முதல் 10 வரையிலும் மாதம் ஒன்றுக்கு பெற்று வருகிறார்கள்.

சர்க்கார் உயர்நிலை கல்விக் குழு சிபார்சு செய்துள்ளது போல் ஆசிரியர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து தர வேண்டும் என்றும் ஆசிரியர் சங்கம் வற்புறுத்துகிறது.

அந்தக் கல்விக் குழு கல்லூரிப் பட்டம் பெற்று பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கும், கல்லூரி படிப்புப் பெற்றுள்ள பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கும் முறையே ரூபாய் 80, 70 ஆக மாதச் சம்பளம் தரப்பட வேண்டும் என்றும், இப்பொழுது தரப்படும் பஞ்சப்படியை ரூபாய் 35-க்கு உயர்த்த வேண்டும் என்றும் சிபார்சு செய்திருக்கிறது.

இரண்டாம் நாள் வேலை நிறுத்தத்தில் கல்கத்தா நகரில் மட்டும் 2000 ஆசிரியர்கள் பங்கு கொண்டுள்ளனர். அவர்கள் ஊர்வலமாக வந்து, சர்க்கார் முதன்மை காரியாலயத்திற்குள் நுழைய முயன்றனர். அவர்களை மேற்கொண்டு செல்ல விடாமல் பலத்த போலீஸ் பாதுகாப்புப் படையினர் தடுத்து நிறுத்தினர். ஆசிரியர்களும் அங்கேயே உட்கார்ந்து கொண்டு சுமார் எட்டு மணி நேரம் அமைதியாகப் போராடினர். போலீஸ் படையாரும் அவர்களை சர்க்கார் காரியாலயத்துக்குள் நுழைய விடாமல் பாதுகாத்து நின்றனர்.

மற்றச் சுற்றுப்புறங்களில் ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாகவும், மாணவர்களும் ஆசிரியர்களின் கொள்கையை ஆதரித்து நிற்பதாகவும் ஆசிரியர் சங்கத்திற்குத் தகவல் கிடைத்திருப்பதாக, ஆசிரியர் சங்க சார்பில அறிவிக்கப்படுகிறது.

சர்க்கார் எச்சரிக்கையாக இருந்து வருவதாகவும் சொல்லப்படுகிறது.

திரு—கொச்சி ஓட்டுச் சீட்டுகள்

6 லட்சம் மறைந்த மாயம்!

திருவனந்தபுரம், பிப். 11—
திரு—கொச்சி மாநிலத்தில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலுக்காக டில்லியிலிருந்து இங்கு அனுப்பப்பட்ட ஓட்டுச் சீட்டுகளில், ஆறு லட்சத்தைக் காணவில்லை.

டில்லி தேர்தல் கமிஷனிடமிருந்து இங்குள்ள தேர்தல் அதிகாரிகளுக்கு இச்சீட்டுகள் அனுப்பப்பட்டபோது வழியில் இவைகள் காணப்படவில்லை யெனத் தெரிகிறது.

தேர்தல் சமயத்தின்போது காணாமல்போன ஓட்டுச் சீட்டுகள், ஓட்டுப் பெட்டிகள் தென்பட்டால் அவைகளை நிராகரிக்குமாறு தேர்தல் அதிகாரிகளுக்கு கமிஷன் உத்தரவிட்டுள்ளது. காணாமல்போன ஓட்டுச் சீட்டுகளின் வரிசை எண்ணிக்கை தேர்தல் அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

காணமற்போன ஓட்டுச் சீட்டுகளை உபயோகித்தவர் கண்டு பிடிக்கப்பட்டால் தண்டிக்கப்படுவரென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பெங்களூரில் தடியடிப் பிரயோகம்

பிரார்த்தனைக் கூட்டத்தில் குழப்பம்

பெங்களூர், பிப். 11—
நேற்றிரவு இங்கு நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில், சிறிய கலவரமொன்று ஏற்பட்டது.

கடந்த சில நாட்களாக தாலூத் தம்பதிகள் தினசரி இங்கு பிரார்த்தனைக் கூட்டம் நடத்திவந்தனர். பிரார்த்தனையில் கலந்துகொண்டால், நோய்நொடிகளெல்லாம் தீருமென்று அவர்கள் கூறினர்.

ஆனால், பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்துகொண்ட பெரும்பாலோர் இதை எதிர்த்து குழப்பம் செய்யவே, போலீசார் தடியடிப் பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைத்தனர். இது வெறும் மதப் பிரச்சாரம் என்றே சொல்லப்படுகிறது. தாலூத் தம்பதிகள் பிரார்த்தனையைக் கைவிட்டனர்.

விவசாய வளர்ச்சி

அண்ணாமலைநகர், பிப். 11—
'இந்தியாவில் விவசாய அபிவிருத்தி' என்னும் பொருள் பற்றி அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் ஆதரவில் டாக்டர் பி. வி. நாராயணசாமி நாயுடு ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

இன்றைய அரசாங்கம் ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத்தின் வளர்ச்சிக்கு ஆவன செய்யத் திட்டம் தீட்டியிருப்பதாகவும் இன்னும் பல முக்கிய அம்சங்களை கவனிக்க வேண்டியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

விழுப்புரத்திற்கு...

பொதுச் செயலாளர்

அண்ணாதுரை

வருகை

★

14—2—54 ஞாயிறு அன்று, தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரைக்கும், மற்ற நாலவருக்கும் விழுப்புரம் தி. மு. கழகச் சார்பில் வரவேற்பு நடத்தி, தூத்துக்குடி வழக்கு நிதி அளிக்கப்படும்.

மதுரை

நாகம்மையார் நினைவு கழகம் ஆண்டு விழா

14—2—54 மாலை 6 மணிக்கு

இடம்:
அண்ணா திடல் (கீழ மார்க்கட்)

பேசுவோர்:
எஸ். முத்து
எம். அய்யாசாமி
கே. எஸ். சந்தானம்

பொங்கல் விழா

14—2—54 ஞாயிறு மாலை 5 மணிக்கு, குளை தி. மு. கழகச் செயலாளர் தோழர் சு. பாலன் தலைமையில், குளை, அவதானம் பாப்பையர் 2-ம் சந்து (பொட்டிக்காரன் வீதி), 3-ம் எண் இல்லத்தில் நடைபெறும் பொங்கல் விழாக் கூட்டத்துக்கு தோழர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று வருகை தரும்படி கேட்டுக் கொள்கிறேன்," என்று மேற்படி கழக செயற் குழு உறுப்பினர் ம. சீனிவாசன் அறிவிக்கிறார்.

குடிசைத் தொழில்களில் இயந்திரங்களைப் புகுத்த முடியுமா?

ஜப்பான் கைத்தொழில் குழு இந்தியா வருகை

கல்கத்தா, பிப். 11
ஜப்பானிய கைத்தொழில்களின் பிரதிநிதிகள் 12 பேர்கள் கொண்ட தூதுக்குழு இங்கு வந்து சேர்ந்திருக்கிறது. இந்தியாவின் குடிசைத் தொழில்களில் இயந்திரங்களைப் புகுத்த முடியுமா என்பது குறித்து இக்குழுவினர் அறிவர். இவர்கள் டில்லி, பம்பாய், பெங்களூர் ஆகிய நகரங்களுக்கு விஜயம் செய்வர். ஏப்ரல் 6-ந் தேதி ஜப்பானுக்குத் திரும்புவர்.

சென்னை மேல் சபை தேர்தல்

நால்வர் போட்டி

சென்னை, பிப். 11—
சென்னை மேல் சபையில் தோழர் ஆதித்தன் ராஜினாமா செய்ததினால் ஏற்பட்டுள்ள காலி ஸ்தானத்திற்கு இடைத் தேர்தல் நடக்கவிருக்கிறது. காங்கிரஸ் கட்சியின் அபேட்சகராக மதுரையிலக்கு மந்திரி ஜோதி வெங்கடாசலம் அபேட்சப் பத்திரத்தை தாக்கல் செய்திருக்கிறார். மற்றும் கோவை ஜி. டி. நாயுடு, திருச்சி கே. ஏ. பி. விசுவநாதம், தர்மபுரி ஆர். என். வீரப்ப செட்டியார் ஆகியோரும் விண்ணப்பித்துள்ளனர்.

எண்ணித் துணிந்தார்!

லண்டன், பிப். 11—
சூயஸ் கால்வாயின் எதிர்காலம் பற்றி பேச எகிப்து பிரதமரை லண்டனுக்கு வருமாறு அழைக்கலாமென்ற யோசனையை பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில் இன்று காமன்ஸ் சபையில் நிராகரித்தார்.

அரக்கோணம் ரயில் நிறுத்த வழக்கு

—o—

20-வது வாய்தாவில் முடியுமாம்!

அரக்கோணம், பிப். 11—
தோழர் ஏ. எஸ். சி. கிருஷ்ணசாமி உள்பட 23 பேர் மீதுள்ள ரயில் நிறுத்த வழக்கு இன்று, அரக்கோணம் சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, போலீசார் வராததால் வழக்கு 17—2—54க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது 19-வது வாய்தாவாகும்; இதற்கு வாய்தாவிற்கும் இன்னும் விசாரிக்காமலிருப்பது குறித்து மாஜிஸ்திரேட்டிடம் தோழர்கள் கேட்டதற்கு, 17-ந் தேதியன்று சாட்சிகள் வந்தாலும், வராவிட்டாலும் அதுதான் கடைசி வாய்தாவாக இருக்குமென வாக்களித்தார்.

விநாயகம் குழுவினர்மீது வழக்கு

வேறு கோர்ட்டுக்கு மாற்றம்

அரக்கோணம், பிப். 11—
தி. மு. கழகத் தோழர்களை தாக்கியதாகவும் ஏ. எஸ். கிருஷ்ணசாமி காரை சேதப்படுத்தியதாகவும் விநாயகம் குழுவினரைச் சேர்ந்த அறுவர்மீது சித்தூர் எஸ். டி. எம். கோர்ட்டில் போலீசாரால் தொடரப்பட்ட வழக்கு, சந்திரகிரி ஸ்பெஷல் பி. எம். கோர்ட்டிற்கு மாற்றப்பட்டுள்ளது.

டாக்டர் வரதராசலு வழக்கு விசாரணை

சென்னை, பிப். 11—
டாக்டர் வரதராசலு நாயுடு மீதும், தோழர் அடைக்கலம் மீதும், இந்திய சர்க்காரிடமிருந்து கைத்தறிக் கண்காட்சிக்காக வாங்கிய துத்தநாகத் தகடுகளை பிபந்தனைகளை மீறியும், கண்ட்ரோலர் அனுமதி இல்லாமலும் விற்பனை செய்ததாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சென்னை பிரதம மாகாண மாஜிஸ்திரேட் தோழர் பி. ராமகிருஷ்ணன் முன்பு விசாரணைக்கு வந்தது. இருவரும் சம்மனுக்கு இணங்க ஆஜராயிருந்தனர். வழக்கு விசாரணை பிப். 22-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஜப்பான் புது பலம் பெறுகிறது

பம்பாய், பிப். 12—
இன்று பம்பாய் துறைமுகத்திற்கு சோப்பு, சீப்பு, கண்ணாடிகள் செயற்கைபட்டு, நூல், சோடியம் ஐட்ரோ சல்பேட், மருந்து சாமான்கள், டார்ச் விளக்குகள் உள்பட 114 டன் சாமான்கள் ஜப்பானிலிருந்து வந்திறங்கியுள்ளன.

யுத்தத்திற்குப் பிறகு இப்போதுதான் சாமான்கள் ஜப்பானிலிருந்து இந்தியாவிற்கு வருகின்றன.

வேதாந்தமல்ல—விஞ்ஞானம்!

புதுடில்லி, பிப். 11—
வேறு கிரகங்களுக்குப் பிரயாணம் செய்வது சீக்கிரமே சாத்தியமாகக் கூடும் என்று ரஷ்ய விஞ்ஞானிகள் கருதுவதாக சோவியத் செய்தி நிலையம் கூறுகிறது. இதற்கான ரஷ்ய ஆராய்ச்சிகள் வெகு தூரம் முன்னேறியிருப்பதாக அது குறிப்பிட்டது.

ஐந்தாம் படையினரை ஒழிக்கச் சட்டம்

கொழும்பு, பிப். 12—
வேவு பார்ப்பவர்கள், ஐந்தாம் படையினர் இவர்களிடமிருந்து இலங்கையைக் காப்பாற்ற ஒரு சட்டத்தை இலங்கை மந்திரி சபை முன்பு பிரதமர் கொத்தலாவல சமர்ப்பித்துள்ளார்.

[illegible]...

—o—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டு இருந்திருக்கிறார்கள்.

பொது மக்களின் பிரதிநிதிகளாகிய நாங்கள், இத்துறையில் பொது மக்கள் கொண்டுள்ள ஆத்திரத்தை எடுத்துக்காட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். இங்குள்ள காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கும் எங்களுக்கும் உள்ள பொதுவான கடமையாகும். சர்க்காருக்கு எதிராக காங்கிரஸ் உறுப்பினர்கள் மக்களின் கூக்குரலை பிரதிபலிக்கத் தவறிவிட்டதினால், லட்சக்கணக்கான நாட்டு மக்களின் உள்ளக்கொதிப்பை இங்கு எதிரொலிக்க வேண்டியது எங்கள் பணியாக இருக்கிறது."

இந்த வருந்தத்தக்க சம்பவம் அத்துடன் நின்றுவிடவில்லை. அதைத் தொடர்ந்து வாய்ப் பாட்டும் வாத்திய கச்சேரியும் நிகழ்ந்தன. இவ்வளவு நடைபெற்றிலாத சம்பவம் நடைபெற்ற எட்டுமணி நேரம் வரையில் தங்களுக்குத் தகவல் தெரியாது என்று சர்க்கார் பெரிய உயர்தர அதிகாரியால் கூறப்படுகிறது.

இந்த வகையில் சர்க்கார் முக்கியஸ்தர்கள் சிலரால் கூறப்பட்டுள்ள விளக்கம் ஒன்றை ஒன்று மறுப்பதாக உள்ளன. சர்க்கார் கூற்று உண்மையே யெனக் கொள்வதாக இருந்தாலும், சிறந்த ஏற்பாடு செய்ய சர்க்கார் தவறிவிட்டது என்பதையே அவை காட்டுகின்றன."

சம்பவம் நடைபெறாமல் தடுக்க முன்னேற்பாடாக ஒன்றும் செய்யத் தவறியதோடு, சர்க்கார் அதிகாரிகள் மிதிபட்டவர்களுக்கு உடனடியாக முதல் சிகிச்சை செய்வதிலும் காலம் தாழ்த்தி இருக்கிறார்கள்.

அதுவுமல்லாமல் உயிருக்கு பயந்து பீதியடைந்து மிரண்டு ஓடிவரும் மக்களையோ வீசும் தடி கொண்டு தாக்கி இருக்கிறது. குதிரை போலீஸ் படையினரும் கூட்டத்தின் மத்தியில் நுழைந்து சென்றது, ஏற்கனவே மக்கள் கொண்டிருந்த பீதியைப் பெருக்கத் துணை செய்தது."

"இவ்வளவிற்கும் பொறுப்பேற்க வேண்டிய கவர்னர், மக்களின் உணர்ச்சிக்குக் கேடுசெய்து விட்டு, சட்டசபை முன் தோன்றி பேச வருவதை நாங்கள் விரும்பாததால், கண்டிக்கும் முறையில் நாங்கள் வெளியேறுகிறோம்."

அவமதிப்பல்ல!

சென்னை, பிப். 11—
ஆந்திர சர்க்கார் சிறைகளில் தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்த எல்லா கைதிகளையும் விடுதலை செய்யும்படி உத்திரவிட்டது கோர்ட்டை அவமதித்ததாகாது என்று உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்தது.

கண்டி, பிப். 11—
பின்தங்கிய ஆசியநாடுகளுக்கு ரஷ்யா அளிக்கத் தயாராக இருக்கும் தொழில் நுணுக்க உதவியில், ரஷ்யா அரசியல் அல்லது பொருளாதார உரிமை எதுவும் கோராதென்று இந்தியாவின் ரஷ்ய ஸ்தானிகர் இங்கு அளித்த பேட்டியில் கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால், அமுதம் அச்சகத்தில் அச்சிட்டுப் (24, குறிய நாராயண செட்டித் தெரு; இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.